உங்கள் விலாசம் மாறினால் தயவு செய்து எங்களுக்கு தெரியப்படுத்தவும்

# திருநாரணன் தாள்

ஸ்ரீசடகோபன் திருநாராயணஸ்வாமி திவ்யப்பிரபந்த பாடசாலையின் செய்தி பத்திரிகை

விஜய வருஷம், ஆனி அச்வினி பரணி சிறப்பு இதழ் ஜூன் 2013

*இலிங்கத்திட்ட புராணத்தீரும், சமணரும் சாக்கியரும்*
*வலிந்து வாது செய்வீர்களும் மற்றும் நும் தெய்வமுமாகி நின்றான்*
*மலிந்து செந்நெல் கவரி வீசும் திருக்குருகூர் அதனில் பொலிந்து*
*நின்ற பிரான் கண்டீர், ஒன்றும் பொய்யில்லை போற்றுமினே*
**(திருவாய்மொழி 4.10.1)**

## பொலிந்து நிற்கும் பிரான்



*பொலிந்து நின்றபிரான்*

திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரியில் வைகாசி விசாகத்தை ஒட்டிபத்து நாள் நடக்கும் உத்ஸவத்தில் ஐந்தாம் திருநாளன்று பக்கத்தில் இருக்கும் எட்டு திவ்ய தேசத்து எம்பெருமான்கள் தம் தம் கருடவாஹனத்தில் வந்து நம்மாழ்வாருக்கு பிறந்த நாள் வாழ்த்து சொன்னதோடு 'என்னைப் பாடு, என்னையும் பாடு' என்று வரிசையில் நின்று ஆழ்வார் திருவாக்கினாலே மங்களாசாஸனம் செய்யப்பட்டு, மிக திருப்தியோடு தம் இருப்பிடத்துக்கு திரும்பச் செல்வார்கள். தன் ஆசார்யனை மங்களாசாஸனம் செய்ய வந்த எம்பெருமான்களை சேவித்த மன நிறைவோடு திருக்கோளூரி லிருந்து வந்த மதுரகவியும் தம் இருப்பிடத்திற்கு திரும்பிச் செல்ல, குருகூர் சடகோபன் தனியாக நிற்கையில்' உனக்கு நான் கூட இருக்கிறேன்' என்று கையைப்பிடித்து அழைத்துச் செல்வது யார் தெரியுமா? ஆழ்வாரை குழந்தைப் பருவத்தி லிருந்து தன் அருகில் இருத்தி, திருவாய்மொழி பாடக்கேட்டு எப்பொழுதும் இன்புற்று இருக்கும் அவ்வூர் எம்பெருமானான பொலிந்து நின்றபிரான்தான்.

நம் முத்துசெல்வன் தன் தோட்டத்துப் பூக்களை மாலையாக அணிந்து நிற்கும்போது பொலிந்து நின்றபிரான் என்ற பெயர் தான் நினைவுக்கு வரும். அருளிச்செயல்களை இசையோடு கேட்கும்போது திருமுகம் மேலும் மலர்ந்து இருக்கும். ஏதும் அறியாத நம் ஆண்டாள் கோஷ்டி அருளிச்செயலை பாடினலே மகிழும் பெருமான் ஆழ்வார்கள் திருவாக்கிலிருந்து கேட்டு எவ்வளவு பொலிந்து நிற்பான்! அர்ச்சையின் திருமுகத்தில் இவ்வளவு பிரதிபலிப்பா! என்று வியக்கத் தோன்றும். ஆனால் இது உண்மை. நம்மையும் நம் கைங்கர்யத்தையும் மிக ஆசையோடு எதிர்ப்பார்க்கிறான், விரும்பி ஏற்றுக் கொள்கி றான்.

இந்த விஜய வருஷம் தொடங்கி பல நல்ல விஷயங்களை நடத்தியிருக்கிறான். கோடை வெய்யிலை மிறி நம் கோஷ்டியினர் தினமும் திருவாய்மொழி ஆயிரமும் பாடி ஆழ்வார்க்கு சமர்ப்பித்து பேரின்பம் பெற்றார்கள். நம் செல்வனும் திருவாய்மொழி பாடக்கேட்டு ஆனந்தமாக இருக்கிறான். வேறு என்ன வேண்டும்? ஆழ்வாரைப் போலலே' அரவில் பள்ளிபிரான்தன் மாய வினைகளையே அலற்றி, இரவும் நன்பகலும் தவிர்க்கிலோம், என்ன குறை எமக்கே?

மேன்மேலும் இந்த பாடசாலையை வளர்த்து தான் வந்த காரியத்தை நடத்திக் கொள்ளுமாறு செல்வனை பிரார்த்திப்போம். நிகழ இருக்கும் ஆனி அச்வினி/பரணி உத்ஸவங்களை நன்கு நடத்திக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்வோம்

**திருமதி.ஸௌபாக்யலக்ஷ்மி**
*இயக்குனர், எஸ்.டி.டி பாடசாலை*

## பாடசாலைச் செய்திகள்

# திருவாய்மொழி பாடினோம், கோடையை வென்றோம்



எதிர்பாராமல் நடக்கும் விஷயங்கள் நன்றாகவே நடக்கும் என்பது உண்மை. நாம் பல விஷயங்களை செய்ய வேண்டும் என்று நினைத்து, எவ்வளவு முயற்சி செய்தாலும் நடக்காது. ஆனால் ஆசாரியன் சங்கல்பித்தால் அது நிச்சயமாக நடக்கும். விஜய வருடம் தொடங்கி சித்திரையில் சித்திரை நாள் தொடங்கிய நம் இசைப் பயணம் திருவாய்மொழி ஆயிரமும் பாடி நிறைவேறியது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். நம் ஆசாரியன் நினைத்தார் செல்வன் நடத்தி கொடுத்தான். ஆண்டாள் கூறுவது போல் 'வில்லிபுத்தூர் விட்டுசித்தர் தங்கள் தேவரை வல்ல பரிசு வருவிப்பரேல். அது காண்டுமே' ஆண்டாளுக்கு ஆசாரியனானவர் அவள் தந்தையான விட்டுசித்தர். அவர் பூமாலை சாத்தி, பாமாலை பாடி கண்ணனை அடைந்தார் என்பது அனைவரும் அறிந்த விஷயம். அதனால் ஆண்டாளுக்கும் கண்ணனை அடைவது எளிதாயிற்று. குரு க்ருபையினால் நமக்கும் அப்படியே நம் சடகோபன் திருவுள்ளம் உகந்தார்... நாம் கண்ணிநுண் சிறுத்தாம்பு பாசுரங்களை 1008 முறை இசையோடு பாடி மதுரகவிகளுக்கு சமர்ப்பித்தோம். 'நீங்கள் என் ஆசாரியனையும் பாடுங்கள் என்று திருவாய்மொழி ஆயிரமும் பாட நியமித்தார். அதுபடியே 15.5.2013 அன்று தொடங்கி 24.5.2013 முடிய சென்னையில் பலபேர் இல்லங்களில் சென்று திருவாய்மொழி பாடி ஆழ்வாரையும் உகப்பித்தோம். நம் பாடசாலையை சேர்ந்தவர்களின் பிள்ளைகளின் உபனயனத்திலும் தேவகானம் பாடி வடுவை ஆழ்வார்கள் அருளுக்கு பாத்திரமாக்கினோம்.

ஸ்ரீராமாநுஜர் திருவுள்ளம் கொண்டு தம்மைப் பற்றி பலர் இயற்றிய பாட்டுகளின் தொகுப்பை கேட்டு உகந்தார். ஸ்ரீ ஸி.கோபாலன் அவர்கள் தலைமையில் நடந்த 10 வயதிலிருந்து 15 வயதுக்குட்பட்ட பள்ளி மாணவ மாணவிகளுக்கு கோடை வகுப்புகளில் தியாகபாரதி வழி இசையும், ஆழ்வார்கள் வாழ்க்கையை இயல் இசை நாடகத்தோடு நடத்தி இன்பமடைந்தோம். மொத்தத்தில் திருவாய்மொழி பாடினோம், வெய்யிலை வென்றோம்.

## ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமமும் 108 திவ்ய தேசங்களும்

***ஸ்ரீ.கே.ரமணசுந்தரம் & ஸ்ரீமதி ஆர்.விஜயலக்ஷ்மி***

| | | |
|---|---|---|
| *நாமாவளி எண்.* | : | *23* |
| *நாமாவளி* | : | *புருஷோத்தமாய* |
| *திவ்யதேசம்* | : | *திருக்கரம்பனூர், (உத்தமர் கோயில்)*<br>*திருவண்புருடோத்தமம் (திருநாங்கூர், சீர்காழி)*<br>*திருகண்டம் என்னும் கடிநகர் (தேவப்பிரயாக்)* |
| *தாயார்* | : | *பூர்ணவல்லீதேவி, புருஷோத்தமவல்லி*<br>*புண்டரிகவல்லி* |
| *பெருமாள்* | : | *புருஷோத்தமன், நீலமேகப்பெருமாள்* |

***இந்த திவ்ய தேசங்களில் பெருமாள் திருப்பெயர் 'புருஷோத்தமன்' என்பதும் நாமாவளியும் ஒன்றேயாகும்.***

# யாதவகிரி மஹாத்மியம்



### ஸுசரிதோபாக்கியானம்

கஷ்டத்தைப் பொறுக்க முடியாமல், பத்னியுடைய நிர்ப் பந்தத்துக்கிணங்க ஸுசரிதன் இரண்டு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தமிழ்நாட்டரச னைப் பார்க்கப் போனான். நான்காறு மாச காலம் காத்திருந்து நகரவாஸத்தின் கஷ்டத்தை எல்லாம் அனுபவித்து, கடைசியில் பெரும் பிரயத்னம் செய்து, அரசனைப் பார்த்துக் கொஞ்சம் திரவியத்தை வாங்கிக் கொண்டு திரும்பினான் *(தொடரும்)*

## ஸ்ரீரங்கத்தில் அரையர் சேவை சில குறிப்புகள்

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாச்சார்யர்

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

### மனவுருக்கம்

ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா வடிமை செய்ய வேண்டும் நாம்' என்ற பாடலை இசைக்கும் போதெல்லாம் 'ஒழிவில் காலமெல்லாம்' என்ற தொடரையே நெடும்போது பாடி மேல் போக வொட்டாதே அவ்வளவிலேயே தலைக்கட்டப் போவா ராம். நம்மாழ்வார் எம்பெருமானுக்குச் செய்யப் பாரிக்கும் தொண்டின் நிட்சியை நினைத்துப் பார்த்து அரையர் மனமுருகிவிட்டார். (3.3.1 ஈடு)

பிள்ளை திருநறையூர் அரையர் திருவாய் மொழியை அனுபவிக்கத் தொடங்கும்போதே ஆழங்கால்பட்டு மனமுருகிக் கண்ணீர் மல்கி நிற்பாராம்.(6.7.1). இந்நிலையை நஞ்சியர் கண்டு வியந்து தம் சிடரான நம்பிள்ளை யிடம் பிற்காலத்தில் கூறி மகிழ்ந்திருக்கிறார். பராங்குச நாயகி தனிப்போக்கிலே ஒருப்பட்டு ''உண்ணுஞ்சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்றென்றே கண்கள் நீர் மல்கி'' நள்ளிரவில் திருக்கோளூர் புக்காள் என்று திருத்தாயார் வருந்தினார். பராங்குச நாயகி கண்கள் நீர் மல்கி நின்றதை அரையரின் மனவுருக்கம் நஞ்சியருக்கு நினைப்பூட்டியபடியால் அது அவரு டைய நெஞ்சினை விட்டு நீங்காமல் பதிந்துவிட்டது *(தொடரும்)*



# கோசாலை செய்திகள்



*குச்சு:* பசியோட இருந்த புலி புண்யகோடி பசு தன் விட்டுக்கு போய் திரும்பி வரலயேன்னு காத்துண்டு இருந்துதாம். அப்போ புண்யகோடி வேகமா வந்து புலி முன்னால வந்து நின்னுது. அதைப் பார்த்த புலியாலே நம்ப முடியலையாம்.

*செல்வி, மாலி:* அக்கா! ஏன்?

*குச்சு :* பசு திரும்பி வராம தன் கூட்டத்தோடவும், தன் கன்னோடயும் சேர்ந்து இருக்கும்ன்னு நினைச்சுது. ஆனா சொன்ன பேச்சு தவராம புண்யகோடி வந்தது புலிக்கு ஆச்சரியமா இருந்ததாம்.

*செல்வி, மாலி:* அப்புறம்?

*குச்சு:* புலியே, நீ பசியோட இருப்பே, என்னை சாப்பிடு"ன்னு புண்யகோடி சொல்லித்தாம்.

*செல்வி, மாலி:* அப்புறம்? உடனேயே பாஞ்சு சாப்பிட்டுதா?

*குச்சு:* அதான் இல்லை. புலிக்கு வெக்கமா போச்சாம். 'என்னைவிட சக்தி குறைவு... ஆனா எவ்வளவு சத்தியமா இருக்கு! எனக்கு பலம் இருந்து என்ன பயன்..அன்பு இல்லையே" ன்னு நெனச்சு "புண்யகோடி நீ விட்டுக்கு திரும்பிப்போ. உன் கன்னோட சந்தோசமா இரு"ன்னு சொல்லித்தாம்.

*செல்வி, மாலி:* அப்புறம்?

*குச்சு:* 'அடடா! நான் நேரம் கழிச்சு வந்தேனா? உனக்கு பசிக்கலையா? என்னை மன்னிச்சுடு''ன்னு புண்யகோடி வருத்தப்பட்டுதாம்.

*செல்வி, மாலி:* அப்புறம்?

*குச்சு:* அதெல்லாம் இல்லே. உன்ன சாப்பிட எனக்கு மனசு வரலே'ன்னு புலி சொல்லித்தாம்.

*செல்வி, மாலி:* ஏன்?

*குச்சு:* "உன்னப்போல ஒரு சாதுவான பிராணிய என்னால சாப்பிட முடியலே. அதுவும் நீ சத்தியத்தை காப்பாத்தின. உன் குடும்பத்தோட சேர்ந்து சந்தோசமா இரு'ன்னு புலி சொல்லித்தாம்.

*செல்வி, மாலி:* ஆச்சரியமா இருக்கே? புலி கூட புண்யகோடியோட சேர்ந்து நல்லதா மாறிடுத்தா!

*குச்சு:* அத அப்புறமா கேக்கலாம். இப்போ விட்டுக்கு போற நேரமாச்சு.'

# இசையும் வைணவம் திவ்யபிரபந்தத்தில் இசையின் முக்கியத்துவம்

*(பாடசாலையின் 20ஆவது வருட நிறைவு விழாவில் திரு.பி.டி.சேஷாத்ரி ஸ்வாமி நிகழ்த்திய உரையின் தொகுப்பு)*

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*



## மணவாள மாமுனிகளும் திவ்யபிரபந்தத்தின் இசையும்

திருவாய்மொழி சாமவேதத்துக்கு சமம் என்று எடுத்துக்காட்ட "இயற்பா மூன்றும் வேதத்ரயம் போலே: பண்ணார் பாடல், பண்புரை இசைகொள் வேதம் போலே" என்ற சூத்திரத்தின் மூலமாக விவரிக்கிறார் அழகியமணவாள நாயினார். நம்மாழ்வார் இயற்றிய மூன்று இயற்பா பிரபந்தங்களான திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ருக்கு, யஜுர், அதர்வண வேதங்களின் ஸ்தானத்தில் கொள்ள வேண்டும். பண்ணோடு பாடப்பட்ட திருவாய்மொழியை "பண்புரை வேதம்'' என்றும், ''இசைகொள் வேதம்'' என்றும் ஓதப்படுகின்ற பண்ணையும், இசையையும் உடையதான சாமவேதத்தின் ஸ்தானத்தில் கொள்ள வேண்டும் என்கிறார். திருவாய்மொழியிலேயே பல பதிகங்களில் பண்ணோடு பாடப்பட்ட ஆயிரம் பாசுரங்கள் என்று ஆழ்வார் கூறுகிறார்.

இங்கு 'பண்' என்றால் என்ன, இசை என்றால் என்ன என்று விவரிக்கையில் 'பண்' என்ற சொல்லுக்கு பல அர்த்தங்களை நம்பிள்ளை ஈட்டில் தெரிவிக்கிறார். அவை கிழ்வருமாறு காண்போம்:

இசை, ஏழுஸ்வரங்கள், இசைப்பாட்டு நரம்புக் கருவிகள், குதிரைக்கனைப்பு, ஓசை, கூத்து, யானை குதிரைக்கு செய்யும் அலங்காரம், தோணி கயிறு, கால நிலை, கைங்கர்யம், ஊழியம், திட்டுவது, படுகுழி, பெண்கள் கூட்டம்" என்று விவரிக்கிறார்.

(தொடரும்)

# கூரத்தாழ்வான் பெருமை

ஸ்ரீராமானுஜருடைய அனைத்து சிஷ்யர்களும் நவரத்ன மாலையின் ஒவ்வொரு முத்து மாணிக்க மாகத் திகழ்ந்தார்கள். இதில் முதன்மையாக விளங்கியவர் கூரத்தாழ்வார்.

ஒரு தடவை சூரியன் மேற்கு திசையில் மறைந்த பின் ஒரு ஜாமப் பொழுதுக்கு மேல் கூரத்தாழ்வானின் ஸபா மண்டபத்தின் தலைவாசல் கதவு சாற்றப் படுகையில் அதிலிருக்கும் வெண்கல மணிகள் கணகணவென்று ஒலிக்க, அவ்வோசையைப் பெருந்தேவித்தாயார் கேட்டுப் பேரருளாளனைப் பார்த்து, இவ்வோசை எங்கிருந்து எழுந்தது? என்று கேட்டருள, அருளாளன் பெருத்த மகிழ்ச்சியுடன், திருக்கூரத்து அரண்மனைத் தலைவாசலில் கதவிலுள்ள வெண்கல மணி ஒலியாகும். நம் கூரேசன், இந்நேரமளவும் நியதி நடத்தினார் போல் காண்கிறது'' என்றருளிச் செய்தார். தாயாரும் பெருமாளும் பேசிக்கொண்டதை அவர்கள் கூட இருந்த திருக்கச்சிநம்பி ஒருநாள் கூரத்தாழ் வானிடம் கூறிட, ஆழ்வானும் நெஞ்சம் குழைந்து பேரருளாளனுடைய செல்வத்தை பிரம்மாதி தேவர்களும் அளவிட முடியாதபோது, அவனுடைய படைப்பில் ஒரு புழுபோன்ற அடியேனுடைய செல்வத்தைக் கண்டு பெருமாளும் பிராட்டியும் மெச்சினார்கள் என்பது கூடுவதோ? இது இவ்வாத்மாவுக்கு ஹானியை உண்டாக்காதோ?' என்ற உடனே தம்முடைய ஸர்வஸ்வத்தையும் நாட்டையும் அருளாளன் திருவடிகளில் ஸமர்ப்பித்து விட்டு புண்யகோடி விமானச் சாயையில் வாஸஞ் செய்ய திருவுள்ளங் கொண்டார். ஸ்ரீராமானுஜ ரையே எல்லாமாகக்கொண்டு வாழ்ந்தார்.

இவருக்கு தாலாட்டு பாடிய செல்வன் ப்ரத்திக்கின் வார்த்தைகளை நினைவு கொள்வோம்.

*"யதிராஜன் திருவடியே களைப்பாற கண்ணுறங்கு,*
*காஷ்மீரம் சென்று வந்த, களைப்பாற கண்ணுறங்கு*
*உடையவரின் பவித்திரமே கூரேசா கண்ணுறங்கு*
*தரிசனத்தை தந்துகந்த களைப்பாற கண்ணுறங்கு*
*தாலேலோ தாலேலோ, தாலேலோ தாலோ*
*தாலேலோ தாலேலோ, தாலேலோ தாலோ"*

(நன்றி: ராமானுசன் 1000
ஸ்ரீ வைஷ்ணஸ்ரீ வெளியீடு)

**PLEASE REMEMBER TO INTIMATE YOUR NEW ADDRESS WHENEVER THERE IS A CHANGE**

# TIRUNARANAN TAL

**JUNE- 2013**

**Look ye, all those who quote the Lingapurana,Ye Jaina and Bauddhas! Instead of arguing endlessly, offer praise to the lord who stands in Kurugur,where tall ears of paddy sway gently in the wind, like whisks:he is you and all your gods, this is no lie.**

*(Tiruvaimozhi 4.10.5)*

## THE GLOWING LORD



***Polindu Ninra Piran, Alvartirunagari***

Every year, in Tirukkurugur, Nammalvar's birth day is celebrated for 10 days. On the fifth day is the famous Garuda Sevai-not only one but nine of them as the Lord from all the other divyadesa around Tirukkurugur visit the place on that day, go round the temple-town, one after the other. The procession is ushered in by nammalvar on his Hamsavahana, as the Parankusa Nayika and is concluded by Sri Madurakavi on behalf of his guru-Sadagopan. After a day-long stay in Kurugur with their beloved alvar, all the deities return to their respective place in their respective pallanquin, before the hot sun rises. Even Madurakavi takes leave of his guru. Lo and behold! Nammalvar is left by himself-regaling in the experience of the previous night in the company of Lords from 8 Divyadesas and sad at the same time for being alone after such gay moments! Do you know who stood by him in the moment of such loneliness?

Yes, it is none other than the Lord Polindu Ninra Piran of Tirukkurugur--waiting for the alvar patiently and lovingly to recover himself -as though He is saying "Don't worry. I am with you"! And slowly Nammalvar reluctantly returns to his sanctorum held by hand by Polindu Ninra Piran. The hearts of devotees melt on witnessing this sight---the lord is with you at your call!

This heart melting scene is enacted day-in and dayout, here in Selvamudaiyan pettai when we are absolutely alone but in the divine compnay of Muddu Selva and His spouses! Such is the power of the singing the verses of the Alvars-that the Lord is always with us waiting to hear more music, just like Polindu Ninra piran in Alvartirunagari is always regaling listening to Alvar's nectar filled tiruvaimozhi and will not leave Alvar even for a fraction of a second. His love for His devotees makes Him glow. Having a glance at the Lord, Alvar calls Him Polindu Ninra Piran. Sending the clouds to the Lord in Tirumulikkalam Nammalvar says "O Radiant clouds spinning in the sky with a fiery lightening hoop! The heart of this wicked self is the Vaikunta of the lord who resides inTirumulikkalam. Convey this to my lord, whose coiffure drips with nectar."

For sure, the lord enjoys and accepts all services-done with love and devotion, however big or small it might be and glows in the proximity of His devotees. He loves to wear the jasmine garland made specially for Him and the special flower band for the head. Like the handful of beaten rice he took from kuchela made Him so happy that He blessed his friend with all the wealth in the world, to His devotees He will give Himself.

Our Muddu Selva is glowing day-in and day out, accepting all our services,also taking us along with Him in the path of devotion and service--He is Polindu Ninra Piran for us. Let's pray to Him to help celebrating His birtday on Aani Asvini on 2nd July and that of His devotee-Sri Srirama Bharati's birthday on the 3rd of July in the appropriate manner and elevate us. To conclude,

"Those who sing this decad of the thousand pure Tamil songs, by Satakopan of Kurugur, surrounded by bullock ploughed fields, address the dark hued lord of lotus red eyes, shall rise and attain his lotus feet".

**Smt.Sowbhagyalakshmi,**
*Director, STD Pathasala*

# PATHASALA ACTIVITIES



***Sri.V.V.Sadagopan***

This summer was well spent,singing kanninun Ciruttambu, songs on Sri Ramanuja and the 1000 verses of Tiruvaimozhi at various parts of Chennai, in the residence of well-wishers and pathasala shishyas, for nearly one whole month. Bhaktavatsala Perumal and Ennai Pettha Tayar of Tiruninravur also lent a patient ear when Tiruvaimozhi was sung on the occasion of Chi Aditya's (Pathasala's shishya in Tiruninravur) upanayanam ceremony. Chi Nigamantha Srinivasan, great grandson of our guru Sri V.V.Sadagopan, also went through the upanayanam ceremony on the 23rd of May. He was also blessed with rendering of Tiruvaimozhi.

The summer sessions began with a Tyaga bharati session at a children's camp conducted by Sri Aravinda Bharati. The session was based on Tyaga Bharati songs for children by Sri.V.V.Sadagopan, followed by life of Alvars with music, dance and drama. The experience was pleasant and it was a proof of the joy way of singing which emphasises the need for joyful music sessions not for winning a competetion but for the joy of it.

The response of the children was very encouraging. The children between 10 to 15 years were knowledgeable and appreciative of the knowledge shared with them.

Similarly the pathasala's Andal Goshti was enthusiastic and went through the singing of Kanninun-Ciruttambu 1008 times untiringly.

There were nearly 30 to 40 members participating in the musical-yaga and the outcome was very touching--all wondered about the elation and ecstacy that Sriman Nathamuni would have experienced after reciting Kanninun Ciruttambu 12,000 times! If singing 1008 times can give so much happiness to us-very ordinary beings!

Sri Ramanuja too, must have felt happy to hear songs that so many of his devotees have sung in his praise, so lovingly too. Especially Sri Prathik (18 yrs) has composed a Kilikkani on Sri Ramanuja which all devotees of Ramanuja must know and sing. To become familiar with the song please visit STD PATHASALA ARAIYARSEVAI FACEBOOK.

Tiruvaimozhi is refered to as the Drama of The Soul by scholars. The musical journey into Tiruvaimozhi took us all to a totally different world experinencing music, literature, drama and language -in all the perspectives and dimensions-which is what Tiruvaimozhi is ---Sarvaarthatham Sri Satakopa Vaangmayam.--bestower of all that one wishes-like a Karpaka Vriksham. We can only thank our Guru Sri V.V. Sada-gopan and Sri Srirama Bharati Swami for enabling us take up the musical voyage into Tiruvaimozhi.

The Devagana Utsavm during Aani Asvini and Bharani is due to take place by the grace of our gurus in the last week of June, to be concluded on the 2nd and 3rd of July, the birth nakshtram of Muddu Selva and Sri Srirama Bharati.




***Jai Hanuman picture by: Pappu (Aniruth), 8 Yrs.***

# ARAIYAR SEVAI



***Tiruvaimoli of Nammalvar***
***The Drama***

After Tirumangai Alvar the practice of staging the play fell out of vogue and Tiruvaimoli passed into oblivion. Only a few Bhagavatas took it to Tirunarayanapuram. The lord who swallows the Universe and holds it in his stomach during every deluge, then issues it during creation, also saved the Tiruvaimoli in his stomach and gave it back to humanity at the appropriate time. Tirunarayanapuram Ayi and Vangipuram Achi, two Swamins from Tirunarayanapuram set out and reached the shrine of Sarangapani in Kumbakonam, then sang the decad Aravamude from Tiruvaimoli in his praise. This fell on the ears of Sri Nathamuni (possibly descended from the Kanphata sect of the Nathayogis from the North India) who was so moved that he made inquiries of the singers to learn all of the thousand songs alluded to in the Phalasruti. They directed him to Alvar Tirunagari, the birth place of the saint. Nathamuni arrived there and saw the icon form of Nammalvar and the sacred tamarind tree and also learnt the Kanninun Siruttambu by rote, from Parankusa Munidasar, a descendant of Madurakavi. This then he recited 12,000 times at a stretch and had a vision of Nammalvar, who revealed to the Yogi, then gave him access to all the rest of Nalayira Divya Prabandham.

*(From the Araiyar Sevai by Sri Srirama Bharati)*
*(to be continued)*

---

# DIVYA DESAM-15

## Tiru-Alundur



***Devadirajan, Tiruvalundur***

**Moolavar Devadirajan/ Standing Facing East/ Utsavar - Amaruviappan/ Sengamalavalli / Darshana Puskarani /Kaveri / Garuda Vimanam / Revealed to Uparisravasu, Kaveri, Garuda, Agastya, Dharmadeva**

The Lord whose birth in the dead of the night released his father from shackles, our father, resides in Tiruvalundur lined by beautiful streets with youthful Vedic seers whose thrice-a-day fire worship ensures rain brought by dark laden clouds.

*(Periya Tirumozhi 7.5)*
(See also 7.6, 7.7 & 7.8)

# READ RAMAYANA – AN INTERNATIONAL INITIATIVE

With separation from my ecosystem and my environment of my natural habitat(my home,and my temple) on account of marriage, my mind used to be in a constant state of turbulence refusing to come to terms with the changing scenarios of life, and hence began my quest for something that would be integral part of my mind's support system irrespective of geography, culture,etc. And it was in one such quest that I chanced upon this initiative called “Read Ramayana” ,last September, while browsing through Facebook, and as I was reading through the details of this initiative, it occurred to me that here is probably something that could answer the plethora of questions that my mind was constantly throwing at me. I grabbed the opportunity and have started my journey into Ramayana.

Read Ramayana is an international initiative by Shri Krishna Sharma, currently resident of Chapel Hill, NC,USA. He was interested from a young age in understanding these stories and relating them to the sociological times when the stories occurred, and comparing them with current sociological conditions. He noticed that some of the observations and advice from these great epics is very relevant even today, but some of them need to be re-interpreted with respect to the contemporary times.

This 'Read Ramayana' initiative is to provide a simple meaning of all the slokas and commentary on interpreting it to the current times. Like a Veena is just a curious piece of wood for an ordinary onlooker, but its essence comes out only when an able musician plays it out. So also, Ramayana, in the hands of a good narrator, gives that sweet music. In this translation of Ramayana, we focus on bringing the music out. The tradition of rendering Ramayana using multiple art forms had been alive throughout India until very recently, i.e., until few decades ago. All those practices and art forms are evaporating, quickly, right in front of our eyes. This translation cannot substitute for the loss of all those practices and art forms. But it tries to get us back in touch with that great epic, in a form and structure that is feasible in this day and age.

**How to Particip]ate?**

This entire movement is facilitated by the power of the interenet. To join in, and start reading the verses from Ramayana, log on to the website address - http://www.readramayana.org/? p=signupgd from your internet browser, and submit your name and email id, and the language in which you wish to receive the Slokas.

Following this, every Saturday, you will receive an email containing upto 100 Slokas, which is the syllabus for that week. Spend the week reading the slokas in various ways – by yourself, as a group, until you receive the next email the following Saturday. Let us all join hands in this mission to spread the knowledge that Ramayana has to offer. Jai Shri Ram!

# LEARN A VERSE

(*Continued from April 2013 issue*)

*by* ***Selvi Radha Durairajan***



**Radha:** Jai joy Adithya! How does it feel to be a Brahmachari after your Upanayanam?

**Adithya:** Radha, it feels great. I do sandhyavandhanam everyday and it gives great confidence in everything I do.

**Radha:** That is good Adithya. Do get your Samashrayanam done soon, so that you can start doing aradhanai for perumal.

**Adithya:** Yes I must do that. Hey Radha, by the way, have you heard of the 6 commandments stated by Sri Ramanuja?

**Radha:** I have heard that Sri Ramanuja had appointed 74 Acharyas in order to spread Vishistadvaitha all over the country. What are these commandments that you just mentioned?

**Adithya:** Yes. He has also advised his students that a true vaishnava is one who follows atleast one of the following six commandments:

1. To study Sri Bhashyam and also to teach them to others.
2. To learn Divya Prabandam with meaning and to teach them to others.



3. To arrange for Thathiyarathanai at Divya desams.
4. To learn dhwaya mantras of the Lord with meaning.
5. To make atleast a small hut and live in Tirunarayanapuram
6. To be in the company of a Lord's devotee.

**Radha:** That was a new insight that you have given me today Adithya. Thank you. Let us spread such messages of Sri Ramanuja as far and wide as possible. His 1000 birthday in 2017 is fast approaching. What better celebration can we offer him than spreading and realizing his words of wisdom?

***"O Ramanuja! I was caught in the net of repeated births, and lived blinded by the illusion of Karmic cause.Of your own, you took me out of despair and uplifted me. The good ones who always melt their hearts steeped in the thought of your compassion, consider it wrong that I even asked you for this."***

*(Sri Ramanuja Nutrandadi 101)*

# LIVES OF ALVARS

*(Continued from April 2013 issue)*

## NAMMALVAR AND MADHURAKAVI

Then another miracle happened. Far away in Ayodhya,an elderly pilgrim called Madhurakavi saw a strange light in the Southern sky.Madhurakavi was a native of Tirukkolur, not far from Alvar Tirunagari. The light seemed to beckon to him, and he followed it. After six months the light disappeared and Madhurakavi found himself in Kurugur.He enquired if there was any miracle there, and the people said there was a child living in the hollow of a tree for more than sixteen years not eating anything.

Madhurakavi went close to the child and asked, "if a young one is born in the womb of a dead, what would it eat, and where would it lie?"

The child for the first time opened his lips and spoke, "It would eat that and lie in that," meaning God.

Madhurakavi was convinced of the divinity of the child and became his disciple.

*(To be continued)*

# GOSHALA NEWS



## DO YOU KNOW FRIENDS?

When the milky ocean was churned by Devas and Asuras to obtain nectar, Lord Vishnu became a giant turtle and helped to hold Mountain Meru on His back to churn the ocean. As the churning went on several precious things came out--after the poison that came first was devoured by Lord Siva! The Divine Horse, The Iravata Elephant, the Parijatha Tree, Goddess Mahalakshmi, followed by Danvantri ,the incarnation of Sriman Narayana as the divine doctor.And you Know what-the celestial cow Kamadenu was also one among these-and kamadenu means the fulfiller of wishes. That is why we are considered sacred and pious and worshipped as dear to Lord Krishna!

# தியாகபாரதி இதழ்



Tyagabharathi, June 2013

# தெள்ளிய அன்பே தியாகபாரதி

## புது வருடம்

*புது வருடத்தில் ஏதேனும் நல்ல தீர்மானம் செய்ய வேண்டுமே? என்ன செய்யலாம் குழந்தைகளே? ம்ம்! 'வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்'' என்ற பழமொழி மிக உண்மையானது. நாம் எதைச் செய்கிறோமோ அதற்குண்டான பலனைத்தான் அடைகிறோம். அதனாலேயே எப்பொழுதும் நல்ல செயலையே செய்ய வேண்டும், நல்ல சிந்தனைகள் வேண்டும், நாம் சொல்வதையே செய்ய வேண்டும், சொல்லும் செயலும் ஒன்றாக இருக்க வேண்டும். இதையெல்லாம் செய்ய உதவுவது ஆலய வழிபாடு. நாம் செய்யும் பலவிதமான செயல்களினால் நாம் கஷ்டங்களை அனுபவிக்கிறோம். ஆனால் எம்பெருமானிடம் அன்பு கொண்டால் துக்கச்சுழலைகளை அறுத்து வெளியேற முடியும். அப்பொழுது பூத்த தாமரை பூ போல் ஒரு புது வாழ்வு மலர்ந்து வரும். மனிதனும் கடவுளும் சேருமிடம் கோயில். ஸ்ரீராமாநுஜர் நமக்கு கோவில் வழிபாடு மூலமாக எம்பெருமானை காதலிக்க கற்றுக் கொடுத்திருக்கிறார். கோவில் வழிபாடு யாரும் செய்யலாம். அது மனிதனுடைய பிறப்புரிமை. நாம் இருக்கும் இடத்தினருகில் ஒரு கோவிலை தேர்ந்தெடுத்து தினமும் அல்லது வாரந்தோறும் காலையும் மாலையும் போய் வரவேண்டும். தூய்மையான ஆடைகளை அணிந்து சுத்தமாக இருக்க வேண்டும். வேஷ்டி புடவை அணிதல் நல்லது. இது நம் கலாசாரத்தில் வழிபாடுக்கு சிறந்தது. பூ, தூபம், பழம், சூடம், வெற்றிலை, பாக்கு இவைகளை காணிக்கையுடன் பூசாரியிடம் கொடுத்து வணங்க வேண்டும். கற்பூரம் அல்லது தீபம் காட்டும்போது கண் திறந்து எம்பெருமானின் அழகிய திருமேனியை நன்றாக பார்க்க வேண்டும். கோவிலை வலம் வந்து சற்று நேரம் அமர்ந்து கீழ்க்கண்ட நாமத்தை பன்னிரண்டு தரம் ஜபம் செய்தல் நல்லது :*

**நாராயண ஹரி ஹரி நாராயண ரே ரே**

*இப்படிச் செய்தால் நம் ஆன்மீக வாழ்க்கை செழிப்பாக வளர்ந்து பல்லவிக்கும், பின்பு புஷ்பிக்கும், பின்பு பலிக்கும். இது நிச்சயம். வங்கியில் சேமித்து வைத்த பணத்தைப் போல நாம் செய்யும் நல்ல காரியங்கள் தக்க சமயத்தில் நமக்கு கை கொடுக்கும். இதை நினைவில் இந்தப் பாட்டை பாடுவோமே!*

**"மனதில் வலிமை வேண்டும் இறைவா,மனதை வெல்லவே
பிறர் நம்மை போற்றும் முன், நாம் உயர்ந்து வளரவே.
கஷ்டம் நம்மை நெருங்கும்போது வலிமை தந்திடு
நஷ்டம் நம்மை நோக்கும்போது பொறுமை கொடுத்திடு
மனதை வசத்தில் வைத்துக் கொள்ளும் வழியைக் காட்டிடு
பிறர் நம்மை போற்றும் முன் நாம் உயர்ந்து வளரவே
மனதில் வலிமை வேண்டும் இறைவா......"**

***அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு***

***விளக்கம்:*** செல்வம் இல்லாதவர்கள் இவ்வுலகத்தில் இன்பம் துய்க்க முடியாது. அதுபோல் அருள் இல்லாதவர்கள் மறு உலகில் இன்பம் துய்க்க முடியாது.

***கதை:*** சிவநேசர் மிகப்பெரிய தனவந்தர். வியாபாரத்தில் கண்ணும் கருத்துமாய் தனது செல்வத்தை மேன்மேலும் பெருக்கி வந்தார். ஆனால் அவருக்கு மற்றவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும் என்ற தர்ம சிந்தனையும், மற்றவர்களின் துன்பம் கண்டு இரங்கும் மனமும் சிறிது கூட இல்லை. தான் சம்பாதித்த பொருட்களினால் அரண்மனை போன்ற வீடும், ஏவலுக்கு நூற்றுக்கணக்கான பணியாளர்களும், நலபுலன்களும் வாங்கிச் சேர்த்து, வாழ்க்கையின் இன்பங்கள் அனைத்தையும் அனுபவித்து மகிழ்ந்தார். அவருக்கு ஒரேயொரு மகன் உண்டு, தனது சொத்துக்களெல்லாம் அவனைச் சேர வேண்டும் என்பதும், அவனும் தன்னைப் போல் சிறந்த வியாபாரியாகி செல்வத்தை இன்னும் பல மடங்குகளாக பெருக்க வேண்டும் என்பதும் அவருடைய கனவாக இருந்தது.ஆனால் அவர் மகனுக்கு எதிலுமே நாட்டம் இல்லை. செல்வம் சேர்ப்பதற்காக, தன் தந்தை நடந்து கொள்ளும் முறைகள் மற்றும் அவரது இரக்கமற்ற தன்மையால் மனமுடைந்தான். சிவநேசரின் முதிர்ந்த வயதில் அவன் வீட்டை விட்டு வெளியேறி காணாமற் போனான்.தன்னுடைய சொத்துக் களின் ஒரே வாரிசான மகன் காணாமல் போனதால், சிவநேசர் துயரக்கடலில் மூழ்கினார். மன ஆறுதலுக்காக அவர் ஒரு யோகியைச் சந்தித்தார்.

சிவநேசரின் கதையைக் கேட்ட அந்த யோகி, "இதுவரை உன் வியாபாரம் உன் செல்வம் என்று சுயநல நோக்கத்தோடு பொருளை அள்ளி அள்ளிக் குவித்தாய். அவ்வாறு பெருக்கிய செல்வத்தை வைத்து இன்ப வாழ்க்கை நடத்தினாய். மற்றவர் களிடம் நீ கருணை காட்டியதில்லை. மற்றவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொள்ளவில்லை. இப்போது, நீ கவலைப்படும் போது உன் சொத்துக்கள் அனைத்தும் உனக்கு ஆறுதல் அளிக்கின்றனவா?... இனி நீ உன் மறு உலகைப் பற்றி யோசி. இதுவரை நீ சேர்த்த செல்வம் உன்னுடன் வராது. யாருக்காக சொத்து சேர்த்தாயோ, அந்த மகனும் விலகி ஓடிவிட்டான். இனியாவது தான தர்மம் செய். மற்றவர்களிடம் இரக்கம் காட்டு. அது ஒன்று தான் மறு உலகில் உனக்கு இன்பம் அளிக்கும். அதை உணர்த்துவதற்காகத்தான், உன் மகன் உன்னை விட்டுச் சென்று விட்டான். கவலைப்படாதே! உன் செயல்முறைகளை மாற்றிக் கொள். உன் மகன் கண்டிப்பாக வீடு திரும்புவான்!" என்றார். மனம் தெளிந்தவராக சிவநேசர் வீடு திரும்பினார்.

## அலமுவின் அதிசய உலகம் - தி.ஜ.ர

**கேட்ட கதை**: அலமு ஒரு குளக்கரையில் உட்கார்ந்திருந்தாள். ஒரு வெள்ளை முயலை துரத்திக்கொண்டே ஓடினாள். முயலின் பொந்து, நேரே குழாய் மாதிரி சென்றது. அலமுவும் அதைத் தொடர்ந்து போனாள். அது ஒரு அதிசய உலகம். அங்கே அவள் ஒன்றன் பின் ஒன்றாய் பல அதிசய அனுபவங்களுக்கு உள்ளானாள். பணியாரத்தை உண்டு மகா பெரிய டெலஸ்கோப் மாதிரி நீண்டுவிட்டாள். முயல் கதவடிக்கு வந்தது. கதவை உட்பக்கம் தள்ளியல்லவா திறக்க வேண்டும்? அந்தக் கதவு அலமு கையிலே முட்டிக்கொண்டது. அப்போது இரண்டு முயல்கள் பேசிக்கொண்டது அவள் காதில் தெளிவாக விழுந்தது. வெளியே சந்தடியாக இருந்தது. பில்லு என்ற பல்லி உள்ளே வர முயற்சி செய்தது. பிறகு, ஜன்னல் வழியே, 'மட மட ! மட மட !' என்று மணியாம் பருக்கைக் கற்கள் வந்து விழுந்தன. அவைகள் மிட்டாய்களாய் மாறியிருந்தன. ஒரு மிட்டாயை விழுங்கியவுடனே, அவள் குறுக ஆரம்பித்து விட்டாள். பிராணிகள் எல்லாம் அலமுவைக் கண்டனவோ இல்லையோ, எல்லாம் அவள் மேல் பாய வந்தன. அவள் ஓட்டமாய் ஓடினாள். ஒரு காட்டுக்குள்ளே புகுந்து கொண்டாள். அங்கே பிரம்மாண்டமான ஒரு நாய் இருந்தது. அதைப்பார்த்து அலமு பயந்தாள். நாயிடமிருந்து தப்பி ஓடினாள். அதிக தூரம் அவள் ஓடிவிட்டாள். ஒரு நாய்குடையைப் பார்த்தாள். அங்கே நீல நிறமான ஒரு கம்பளிப்பூச்சி உட்கார்ந்து கொண்டிருந்தது. நீளமான ஒரு ஹுக்காவை வெகு சுவாரஸ்யமாகக் குடித்துக்கொண்டிருந்தது. பட்டுப்பூச்சி தூங்கி விழுந்து கொண்டே இவளுடன் பேசத்தொடங்கியது.



**இனி**: "நீ யார்?" என்று பட்டுப்பூச்சி கேட்டது. இப்படி அதட்டிக்கேட்டால் பேச எப்படித் துணிச்சல் வரும். அலமு கொஞ்சம் கூச்சத்தோடு பதில் சொன்னாள். "நான், நானா? – எனக்கு அது தெரியவில்லை, சுவாமி. இப்போது நான் யார்? அதுதான் எனக்கு தெரியவில்லை. முன்னே நான் யார்? இன்று காலையில் எழுந்த போது நான் யார்? அதுவாவது கொஞ்சம் எனக்கு தெரியும். ஆனால் அதற்குப்பின்பு பல தடவை நான் மாறிவிட்டேன்."

பட்டுப்பூச்சி கொஞ்சம் கடுமையான குரலில் கேட்கத் தொடங்கியது; "நீ என்ன சொல்கிறாய். நீ சொல்வது புரியவில்லை. நீ சொல்வதை நீதான் விளக்கிச் சொல்ல வேண்டும். விளக்கிச் சொல்."

"நான் சொல்வது என்னவோ அதை நான் விளக்கிச் சொல்ல முடியாது, சுவாமி. சுவாமி ! ஏனென்றால் நான் தான் நானில்லையே!" என்று அலமு பதில் சொன்னாள்.

"நீ சொல்வது ஒன்றும் புரியவில்லை; ஏன் இப்படி ?" என்று கேட்டது பட்டுப்பூச்சி. அலமு வெகு மரியாதையாகச் சொன்னாள் " என்னால் இதற்கு மேல் தெளிவாய்ச் சொல்லத் தெரியவில்லை. ஏனென்றால் என்னை எனக்கே புரியவில்லையே. ஒரே நாளில் பலவித அளவு உருவங்களாக மாறிக்கொண்டே இருந்துவிட்டேன். அது என் மனசுக்கே பெரும் குழப்பமாகத் தான் இருக்கிறது."

குழப்பமா! உரு மாறினால் மனசுக்கு குழப்பமா? அது ஒன்றும் வராது," என்றது பட்டுப்பூச்சி.

(தொடரும்)

---

## சூரிய வம்சத்தின் வரலாறு 5

*விசுவாமித்திரர் இராம இலட்சுமணர்களுக்கு சொன்ன கதைகள்*

உனக்கு தெரியுமா?

**இதுவரை**: குசநாபருக்கும், கிரிதாசி என்ற தேவ கன்னிகைக்கும் 100 பெண்கள் பிறந்தனர். அந்த நூறு பேரும் பேரழகிகளாய்த் திகழந்தனர். அவர்கள் தங்களை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டனர். வாசனை திரவியங்களைப் பூசிக் கொண்டனர். ஆடிப்பாடித் திரிந்தனர். இனிமையாகப் பாடினர். உல்லாசமாகச் சுற்றினர். வாயு பகவான் அவர்களைக் கண்டு ஆசைப்பட்டார். ஆனால் அவர் சொன்னதைக் கேட்டு அப்பெண்கள் மறுத்து விட்டனர். வாயு பகவான் அவர்களிடம் பெரும் கோபம் கொண்டு சபித்துவிட்டார். குசநாபர் திடுக்கிட்டார். தன் பெண்களுக்கு திருமணம் செய்வது பற்றி கலந்து ஆலோசிக்கத் தொடங்கினார்.

**இனி**: **பிரம்மதத்தன்:–** சில காலத்திற்கு முன் சூளி என்ற மகரிஷி கடுமையான தவம் மேற்கொண்டு இருந்தார். ஊர்மிளா என்ற கந்தர்வப் பெண்ணிற்கு 'சோமதா' என்ற மகள் ஒருத்தி இருந்தாள். அவள் அந்த மகரிஷிக்கு பல நாட்கள் பணிவிடை செய்து வந்தாள். அவர் பிரமச்சர்ய ஒழுக்கத்தை மேற்கொண்டு வாழ்ந்தார்.

சோமதாவின் பணிவிடையால் சூளி மகரிஷி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். எனவே அப்பெண்ணைப் பார்த்து, "பெண்ணே! உன் பணிவிடைகள் என்னை மகிழ்ச்சிக்கு உள்ளாக்கின. அதற்காக ஏதேனும் பிரதி உபகாரமாகச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறேன். உனக்கு நான் என்ன செய்ய வேண்டும். அதனைத் தயக்கம் இல்லாமல் சொல்; செய்கிறேன்" என்று கூறினார்.



உடனே சோமதா, "மகரிஷியே! நான் இதுவரை திருமணம் செய்து கொள்ளாமல் கன்னிப் பெண்ணாகவே வாழ்ந்து வருகிறேன். தாங்களோ மகா தவசி. பிரம்மாவிற்குச் சமமானவர். சர்வ சக்திகளும் படைத்தவர். தங்களைப் போன்ற பராக்கிரமம் உடைய புதல்வன் ஒருவனைப் பெற விரும்பிகிறேன்.'' என்று பணிவுடன் கூறினாள்.

இந்த இக்கட்டான வேண்டுகோளை எவ்வாறு நிறைவேற்றுவது என்று மகரிஷி சிந்தித்தார். அவர் தன்னுடைய விரதத்தையும் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை. அதே சமயம் சோமதாவின் விருப்பத்தையும் நிறைவேற்ற விரும்பினார்.

எனவே அவர் தன் தவ வலிமையால் தன்னைப் போன்ற பராக்கிரமம் உள்ள புதல்வன் ஒருவனை மனத்தால் உருவாக்கினார். அவனைச் சோமதாவிடம் கொடுத்தார். அக்குழந்தை 'பிரம்மதத்தன்' என்று பெயரிட்டார். அவனை அன்புடன் ஏற்றுக் கொண்ட சோமதா ஆசையுடன் வளர்த்து வந்தார்.

(தொடரும்)

# SUPPLIER OF NUTRIMENTS

*(Contd. from April 2013 issue)*

***(Courtesy: 'Vak's "The Lord at your call" by Shri V.S.Karunakaran Swamy)***

This meant a delay of His darshan for another half an hour atleast. Disappointment writ on His face.Thirumazhisai Piran chose to await the Deeparadhana for having the glimpse of his beloved Kesava.

Inside the Garbhagriha, as the Chief Priest began to offer nivedhan, voice emanated from Lord Aravamudha."stop"

The Archaka was stunned, continued Lord Aravamudha "My dear Piran from Thirumzhisai has come. Kindly bring him in immediately."

Thirumazhisai Piran was rushed in. Before the Lord ,was a golden vessel full of Sarkkara Pongal floating in ghee-smelling sweet and ready for nivedan:

"Piran" said Aravamudha, "please take this pongal first. I am going to accept this as nivedan only after you take it," Piran was dumb-founded.

"My Lord: he said after a while. "How can the servant take food when the Master has not taken it? It is not in order. It is against Sastras."

"Piran!" says Lord Sarangapani. "Do you know that your body is different from your soul?"

"Lord, I am a believer of Vedas. I know I have a soul distinct and different from my body".

"Now please listen. One takes food for the body or the soul?"

"It is for the body only," says Piran.

" You know Iam called Bhootatma-- for all the beings in the uni verse are my body", says the Lord. I am the Universal Soul. I am your soul's soul too. You are my body. Should I not arrange to nourish you first? Hence you take this Pongal first. Today I am going to take food only after you take this".

"But my Lord! I am not interested in just the mundane food. I need food for my soul--that is your darshan. That is enough."

***(To be continued)***

### VISHNU SAHASRA NAMAM-10



**PHUTHATHMA**
The Lord is simply pure and is neither affected by the fruits of karma nor by the effects of karmas of the jeevatmas.

---

**SLOKA CORNER**:

**BHAGVAD GITA: CHAPTER 7, VERSE 3:**

मनुष्याणां सहस्रेषु कश्चिद्यतति सिद्धये ।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः ॥ ३ ॥

**Transliteration:**

***manuṣyāṇāṁ sahasreṣu kaścid yatati siddhaye***
***yatatām api siddhānāṁ kaścin māṁ vetti tattvataḥ***

**Anvaya:**
Manusyanam sahasresu … out of many thousands of men; kascit… hardly one; yatati… endeavors; siddhaye… for perfection of self-realization; (ca)…and; yatatam.. of those so endeavoring; (kascit)… hardly one; siddhanam… has achieved the perfection of self-realization; (ca iyam)… and of those; kascit … hardly one; vetti… knows; mam… Me; tattvatah … in truth.

**Translation:**
Out of many thousands of men hardly one endeavors for the perfection of self-realization, and of those so endeavoring hardly one has achieved the perfection of self-realization and of those hardly one knows Me in truth.

## Quiz UR Brain

1. What was the greatest contribution to the world by Nathamunigal during his sojourn at Gangaikonda Chozhapuram?
2. Name the important sishyas (disciples) of Nathamunigal.
3. Name the avathara sthalam of Uyyakondar.
4. Name the birth star & Tamil month of incarnation of Uyyakkondar.
5. Name the Rahasyam passed on to Uyyakkondar by Nathamunigal.
6. Who was the grand son of Nathamunigal?
7. Through whom did Alavandar get the Rahasyaarthangal left behind for him by Nathamunigal?
8. Name the avathara sthalam of Alavandar.
9. Name the birth star & month of Alavandar.
10. Who had verbal arguments with Yamunai-t-turaivar?

*Courtesy:*
*Swami Nammazhvar (I) Foundation*

**Answer for Puzzles:**

1. 21
2. 1 1/3
3. 3 sheep, 2 goats and 1 horse

**Answers to Quiz Ur Brain**

1. Nalayira Divya Prabhandams were set in music with tune and tala for singing as Divya Ganams
2. Kurugai Kavalappan, Uyyakkondar, Thirukanna-mangai-andan
3. Thiruvellarai
4. Karthigai, month:Chithirai
5. Azhvars' Arulicheyal Rahasyam
6. Yamunai-t-turaivar (later he was knows an Alavandar)
7. Through Manakkal Nambi
8. Kattumannar Koil
9. Star: Uthiradam, Month: Adi
10. Aakkiazhwar

## Number Pyramid

Each brick in the number pyramid is the sum of the two blocks immediately below it. Fill in the rest of the pyramid taking note of the numbers already in place and observing the following rules: a) all the numbers at the base are positive integers. b) "a" is a multiple of 7, "c" is a multiple of 5 and "e" is a multiple of 11.




## Puzzles

1. What is the smallest whole number that is equal to 7 times the sum of its digits?
2. My double exceeds my half by 2. What number am I?
3. In reply to an enquiry about the animals on his farm, the farmer says: "I only ever keep sheep, goats and horses. In fact, at the moment they are all sheep bar three; all goats bar four, and all horses bar five. How many does he have of each animal?



**PRINTED MATTER - BOOK POST**

**TIRUNARANAN-TAL**

**June 2013 ISSUE**

**Edited & Published by**: Sowbhagyalakshmi Srirama Bharati, Director, Sri Sadagopan Tirunarayanaswami Divya Prabandha Pathasala, Sadagopan Tirunagar, Jalladampet, Chennai - 600 100, Ph: 044-22462436, 99529 60527 Email: aravamudhu@gmail.com, nammalvar2001@yahoo.co.in, www.araiyar.com Printed at : V.K.Graphics, Ch-33, Ph.7299237520. For Private Circulation

## Summer Camp



## Kanninun Chiruttambu & Tiruvaimozhi



## Ramanuja Jayanthi

